விலை: 50.00
பக்கங்கள் : 12 + II
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 005 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை (24.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### தொண்டர் ஊழியர்களுடன்
## சுகாதார அமைச்சரை சந்தித்த அர்ச்சுனா



11

## மார்கழிப் பெருவிழா நாளை
### யானை மீது திருமுறைகள் நகர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை இடம் பெறும் மார்கழிப் பெருவிழா வில் விசேட அம்சமாக மேன்மை கொள் சைவ நீதிதனை உலக நிவிக்கும் பொருட்டு சிவனருட் செல்வர்களினால் தில்லைக் கூத்தன் தென்னாடுடைய சிவன் மீது பாடியருளப்பட்ட திருமுறைகள் யானையேற்றம் கண்டு யாழ்.மாநகரை வலம் வரவுள்ளன.

இப்புண்ணிய நிகழ்வானது நாளை புதன்கிழமை காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் திருக் கோவிலில் விசேட

11

### வடக்கு மக்களுக்கு
## சேவை செய்வது சவாலானது
### வடக்கு ஆளுநர்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு எங்கள் மாகாண

11

### பயங்கரவாதத்துக்கு நிதியிடலை
# ஒழிக்க பலமான கட்டமைப்பு அவசியம்
### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான கட்டமைப்பொன்று அவசியம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பணம் தூயதாக்கலுக் கெதிரான மற்றும் பயங்கர வாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கான ஆசிய பசுபிக் குழுவின் மூலம் நடத் தப்பட இருக்கும் இலங்கையின் பரஸ்பர மதிப்பீட்டிற் கான முக்கிய தயார்படுத்தல் கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸா

11



## டெங்குத் தொற்று யாழில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் மாத்திரம் இதுவரை 91 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் அண்மையில் நில

11

## வாழைக்குலை ஏற்றி சென்றவர் மரணம்
### நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் வாழைக்குலை ஏற்றிச் சென்றவர் வீதியில் விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த தேவதாசன் உதயசேன (வயது-64) என்ப

11

## கேப்பாப்பிலவு படைத்தளத்தில் 103 மியன்மார் அகதிகள்

(முல்லைத்தீவு)

மியன்மார் அகதிகள் மீண்டும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படைத்தளத்திற்கு நேற்று மாலை 5 மணியளவில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த 19ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு கரை ஒதுங்கியிருந்தது.

பின்னர் கப்பல் கரைக்கு வர முடியாத நிலையில் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை கடற்படைத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் திருகோணமலை ஜமாலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டி

11

## டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டம்
### இந்தியாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையுடன் இணைந்து மக்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபடவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தைச்செயற்படுத்தவுள்ளது.

அடுத்த மாதம், இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்

02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
2000 . 10 . 13

உதிர்வு
2017 . 12 . 24

நன்றி மறவோம் என்றென்றும்

## அமரர் தவேந்திரன் தனிஸ்ரன் [தனுஸ்]

2017.12.24 அன்று அகால மரணமடைந்த தவேந்திரன் தனிஸ்ரன் (தனுஸ்) அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இவரின் பிரிவுத்துயர் கேட்டு (24.12.2017) சம்பவ இடத்துக்கு உடனடியாக வருகைதந்த பொதுமக்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது பண்டிகைக்கால கொண்டாட்டங்களைத் தவிர்த்து எம் செல்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் மக்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்தினர், பொதுமக்கள், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பணியாளர்கள், முல்லை மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாதைகள் அச்சிட்டவர்கள்,வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், உணவு தந்து உதவிய உறவுகள், நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தையும் தாங்களே செவ்வனே செய்து முடித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**077 276 8570, 076 971 1453** (C-1879)

6ஆம் வட்டாரம், சிவநகர்,
புதுக்குடியிருப்பு.

தனிஸ்ரன் பல்பொருள் வாணிபம்,
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு.

# விற்காமல் வைத்திருக்கும் வாகனங்களுக்கு அபராதம்

## கட்டுப்பாடு விதித்த அநுர அரசு

வாகன இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள அதேவேளை இறக்குமதி செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேல் விற்காமல் வைத்திருக்கும் வாகனங்களுக்கு அபராதம் விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விதிமுறைக் கமைய, பேருந்துகள், கிரேன்கள், கல்லிபோவர் போன்ற சிறப்பு வாகனங்கள் மற்றும் சிறிய கார்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவுள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி,

முதல் கட்ட வாகன இறக்குமதி தாராளமயமாக்கல் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சுங்க ஆவணங்களைச் சமர்ப்பித்த 90 நாட்களுக்குள் நுகர்வோருக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்வதற்கு வாகன இறக்குமதியாளர்கள் பொறுப்பேற்க வேண்டும் எனவும் வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்படவில்லை எனில், வாகனங்களின் காப்பீட்டு மதிப்பில் 3 சதவீதம் மாதாந்திர அபராதம் விதிக்கப்படும்.

மேலும், ஒருவர் தனது பெயரில் வாகனத்தைப் பதிவு செய்தால், அதனை மூன்று ஆண்டுகளுக்கு மாற்ற முடியாது என்பதோடு தாமதக் கட்டணம் செலுத்தாமல் எந்த வாகனத்தையும் மோட்டார் போக்குவரத்துத் துறையில் பதிவு செய்ய முடியாது எனவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கண்டல் தாவரமான சவுக்கை பாதுகாக்குமாறு கோரிக்கை

*(யாழ்ப்பாணம்)*

தற்போது யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் சவுக்கு மரம் வகைதொகையின்றி அழிக்கப்பட்டு வருகிறது. பொது அமைப்புக்களாலும் சமூக நிறுவனங்களாலும் பலத்த பிரயத்தனத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட சவுக்கு மரங்கள் வகை தொகையின்றி கண்மூடித்தனமாக பண்டிகைக் காலத்தில் அழிக்கப்பட்டு வருவதால் அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இயற்கைப் பண்பாட்டு அபிவிருத்தி மையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-7)

# நல்லூர் பிரதேச சபை
# கொக்குவில்
# 2025ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 01.01.2025ம் திகதி தொடக்கம் 31.12.2025ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 24.12.2024 - 30.12.2024 திகதி பி.ப 2.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 31.12.2024 திகதி மு.ப 11.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 31.12.2024 திகதி மு.ப 11.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

**2025ம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 10,000.00 | 103,500.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 10,000.00 | 159,000.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக்கடை இல 02 | 1,000.00 | 15,000.00 | 580,000.00 |
| 2 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 20,000.00 | 1,400,000.00 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 728,000.00 |

கேள்வி அறிவித்தல் தொடர்பான நிபந்தனைகளை **05.11.2024ந்** திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பார்வையிடமுடியும் அத்துடன் அலுவலக நாட்களில் காலை8.30 - மாலை 4.15மணி வரை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
24.12.2024

(C-1884)

# அரிசி இறக்குமதிக்கு மேலும் காலவகாசம்

அரிசி இறக்குமதிக்கான காலவகாசத்தை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான யோசனை நேற்று அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

**டிஜிட்டல்...**

படவுள்ளதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.கடந்த வாரம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, இந்தியா மேற்கொண்ட வெற்றிகரமான, மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் முயற்சிகளுக்கு உதவ இந்தியா தயாராக இருப்பதாகவும் இலங்கையில் டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை விரைவாக செயற்படுத்த ஒப்புக்கொண்டதாகவும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் ஊழல் குறைவாக இருக்கும். அத்துடன் இது மில்லியன் கணக்கான மக்களுக்குப் பயனளித்த இந்தியாவின் ஆதார் அட்டையைப் போன்றது என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அரசத்துறையின் மிகவும் வெற்றிகரமான டிஜிட்டல் மயமாக்கல் உலகளவில் பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கீழ் வரும் டிஜிட்டல் பொருளாதார விவகார அமைச்சகமும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனமும் இந்திய அரசாங்கத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயற்படுத்தும்.

இது தொடர்பான முன்னெடுப்புகளை மேற்கொள்ள இந்திய அரசாங்கக் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தர உள்ளது. இதன்படி, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஆரம்பமாகும் முதல் இந்திய முதலீட்டுத் திட்டம் இதுவாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்க வேண்டும்!

## தி.மு.க தீர்மானம் நிறைவேற்றம்

(சென்னை)

**இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கச்சதீவை மீட்க வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுகின்றமை மற்றும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றமை என்பன அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

குறித்த மீனவர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகின்றமையினால் இரு நாடுகளுக்கு இடையே நிலவும் நல்லுறவுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்குக் கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுவில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி-8)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை தனித்து எதிர்கொள்ள ஐ.தே.க.திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு முற்பகுதியில் உள்ளூராட்சிசபைத்தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பிரதான அரசியற் கட்சிகள் தேர்தலுக்கான தயார்படுத்தலை ஆரம்பித்துள்ளன.


அந்தவகையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை யானை சின்னத்தின் கீழ் எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பதற்குரிய ஆரம்பகட்ட செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித்துக்கு வழங்குவதற்கு கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினர் பச்சைக் கொடி காட்ட மறுப்பதால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியமான திசையை நோக்கி நகரவில்லை என கூறப்படுகின்றது. எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலை யானை சின்னத்தின் கீழ் எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளதுடன் தேர்தலுக்கு முன்னதாக கட்சியை மறுசீரமைப்புக்கான ஆரம்பக் கட்ட திட்டங்கள் வெளியிடக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.ஜெயந்தினி சத்திஜேந்திரா அவர்களின்
தந்தையார்
அமரர். **காசிப்பிள்ளை நடராஜா**



அவர்கள் 21.12.2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை.

(2819)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் தனித்து களமிறங்கும் பெரமுன

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதில் அவதானம் செலுத்தி வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் அதன் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கை சமாஜக் கட்சியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவதில் மாத்திரம் அவதானம் செலுத்தியுள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்று குழு அண்மையில் கூடி இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன தனித்து போட்டியிடுவதே பொருத்தமானது என அக்கட்சியில் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (நி-8)

# இராசிபலன்

24.12.2024
மார்கழி 09, செவ்வாய்க்கிழமை
நவமி முன்னிரவு 8.45 மணிவரை

அத்தம் பிற்பகல் 1.38 மணிவரை
சுபநேரம் 10.56-12.26 மணிவரை
இராகுகாலம் 3.26-4.56மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

**வளவன்**




நல்லவர்களின் அறிவுரைகளும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நிதி நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு




பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணங்கள் எளிதில் கைகூடும்




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிவரலாம், குடும்பத்தினரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வருமானம் திருப்தி தரும்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.




குடும்பத்தினரிடையே கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடன் தொல்லைகள் அதிகரிக்கலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், துயரங்கள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.




வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்களின் வருகையுண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கோபத்தோடு எழுந்தால் நஷ்டத்தோடு உட்காருவீர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## பொது அறிவித்தல் - 2025

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்களின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

| இல | விடயம் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|
| 01 | ஆதனப் பெயர் மாற்றம் | காணி உரிமையினை மாற்றிப் பெற்றுக்கொண்ட வர்கள் உடனடியாகவே பிரதேச சபையின் உரிய உப அலுவல கங்களில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று தேவை யான உறுதிகளின் பிரதியுடன், நில அளவைப் படம், தோம்பு மற்றும் தேவையான ஆவணங்களுடன் சட்டத்தரணி ஒருவரினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பத்தினையும் வழங்குவதன் மூலம் ஆதனப் பெயர் பதி வேட்டில் பெயர் மாற்றத்தினை செய்து கொள்ள வேண்டும். |
| 02 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் படி உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அமைந்திருக்கும் அனைத்து ஆதனங்களிற்கும் 2025 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியினை 31.01.2025 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு மொத்த வரியில் 10% கழிவு வழங் கப்படும். என்பதோடு காலாண்டுக் கட்டணங்களாக செலுத்தப்படும் போது ஒவ்வொரு காலாண்டினதும் முத லில் வரும் மாதம் முடிவதற்குள் செலுத்துபவர்களிற்கு 5% கழிவும் வழங்கப்படும். இச் சலுகையானது இறுதி காலாண்டிற்கு செல்லுபடியாகாது. குறித்த வருடத்திற்கான ஆதன வரியினை குறித்த வருடத்திற்குள் செலுத்த தவறியோருக்கு ஆண்டு வரியில் விறாத்துக் கட்டணமாக வெறுங் காணி, வதிவிடம் போன்றவற்றிற்கு 15% உம் ஏனைய ஆதனங்களிற்கு 20% உம் அறவிடப்படும். |
| 03 | வியாபார உரிம அனுமதிப் பத்திரம் | சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற் கொள்பவர்கள் 2025 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2025.03.31 ஆம் திகதிக்கு முன்பாக உரிய ஆவணங்களினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2025 ஆந் திகதிக்கு முன்பாக உரிய கட்டணங்களினை செலுத்த தவறுவோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் | 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 27 ஆந் திகதிய 2264/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் 'ஈ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குள் மேற்கொள்வோர் தமது பகுதி உப அலுவலகத்தில் உரிய படிவத்தினை பெற்று சூழல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் 03 வருடங்கள் முடிவடைந்த சூழல் பாதுகாப்பு உரிமங்கள் யாவும் புதுப்பிக்கப்பட வேண்டும். |
| 05 | கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல் திருத்துதல் கட்டணங்கள் அறிவிடல் | 1.வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டிடங்கள் அமைத்தல், எல்லைச் சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், கிணறுகள், குழாய்கிணறுகள் அமைத்தல் கட்டடங்கள் விரிவாக்கம் செய்தல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதி அற்ற கட்டடங் களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.<br>2. கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத் திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக கால நீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.<br>3. அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச் சான்றி தழை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>4.அனுமதியற்ற கட்டடங்களிற்கு பின்வருமாறு தண் டப்பணம் அறவீடு செய்யப்படும். அத்துடன் வீதி எல்லைக் கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் அகற்றப்படும். |
| 06 | துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக் கொள்ளல் | 2025 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2025.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 07 | விளம்பரங்களை காட்சிப்படுத்தல் | சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங் காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங் களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனும தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும். |
| 08 | முச்சக்கரவண்டி தரிப்பிடம் | சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும். |
| 09 | மரக்கறி, மீன், இறைச்சி விற் பனை தடை செய் தல் | வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைக ளிலிருந்து 500m தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய மிருகவகை இறைச்சிகள் யாவும் பிரதேச சபையின் உத்தரவுப் பத்திரத்திற்கு அமையவே விற்பனை செய்யப்படலாம். |
| 10 | படவரைஞரைப் பதிவு செய்தல்/ புதுப்பித்தல் | 2025 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2025.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக்கொள்ளவும். இதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதிச் சான்றிதழாக NVQ 05 (கட்டடவாக்கத்துடன் தொடர்புடையது) சமர்ப்பிக்கப் படவேண்டும். |
| 11 | திண்மகழிவுகள் தொடர்பாக குடியி ருப்பாளர்கள், வியா பார நிலை யங்கள் கடைப் பிடிக்க வேண்டியவை | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய திண்மக்கழிவுகளினை தரம் பிரித்து வழங்கும் குடியிருப்பாளர்கள், வியாபார நிறுவ னத்தினோரது திண்மக் கழிவுகள் மட்டுமே பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனங்களில் பெற்றுக்கொள் ளப்படும். |
| 12 | பொது இடங்களிலும் வர்த்தக நிலைய ங்கள் முன்பாக வும், வீதியோரங்க ளிலும் கழிவு களை போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. | சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொது மக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவ லகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். |
| 13 | இந்து மயானங்க ளில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல் லது புதைப்பதற்கு கட்டணம் அறவி டப்படும். | இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண் ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 14 | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங் குதல் தொடர்பாக | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றம் வீதி அபிவிருத்தி சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும். |
| 15 | பொதுச் சுகாதாரம் பேணல் | சபையின் எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணிகளின் உடமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் அவற்றினை துப்பரவு செய்து பொதுச் சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 16 | கழிவு நீர் | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக் கழிவுநீர், வியாபார நிலையங்களின் கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானதாகும். அவ்வாறு செயற்படுவோர் உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | பிரதேச சபையால் வழங்கப்படும் இதர சேவைகள் | 1) குடிநீர் வழங்கல் சேவை<br>எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் 1 லீற்றர் ரூபா 1.00 என்ற கட்டண அடிப்படையிலும் வேறு வகையான பயன்பாட்டிற்கு 1 லீற்றர் ரூபா 2.00 என்ற கட்டண அடிப்படையிலும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.<br>2) கனரக வாகன சேவைகள்<br>மோட்டக்கிரேண்ரர், பக்கோ, கலிபௌசர், றோலர் மற்றும் பொப்(க)கற்போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்ட ணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக் கொள்ளலாம் |

| தொ.இல | அனுமதியற்று கட்டப்படும் கட்டடங்களுக்கான தண்டப்பண விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் | வர்த்தக மற்றும் ஏனைய தேவை களுக்கான கட்டடங்கள் ஒவ்வொரு ச.மீற்றருக்கும் |
|---|---|---|---|
| 01 | அத்திவார பணிகளின் பூர்த்தி (தூண் பீட மட்டம் வரை) | ரூ.200.00 | ரூ.500.00 |
| 02 | தூண்கள் மற்றும் விட்டங்கள் உள்ளடங்கலாக கூரை மட்டம் வரையிலான நிர்மானம் (கூரை நீங்கலாக) | ரூ.300.00 | ரூ.1000.00 |
| 03 | சுவர்களுடனான கூரை மட்டம் வரையான நிர்மானம் | ரூ.400.00 | ரூ.1500.00 |
| 04 | நிர்மானம் பூர்த்தி செய்யப்பட்டது | ரூ.500.00 | ரூ.2000.00 |
| 05 | கைபிடிச்சுவர்கள்/தடுப்புச் சுவர்களை நிர்மானித்தல் ஒவ்வொரு நேரான மீற்றருக்கும் | ரூ.200.00 | ரூ.500.00 |
| 06 | தொலைத் தொடர்பாடல், பரிமாற்றம் மற்றும் உணர் கொம்பு கோபுரங்களை உருவாக்குதல் | நிர்மானம் - நிலமட்டம் ரூ.150,000.00<br>நிர்மானம் - கூரைமேல் ரூ.100,000.00 | |
| 07 | அமைவுச் சான்றிதழ் பெறாமல் குடியிருப்பவர்கள்/ பயன்படுத்துதல் | நாளொன்றுக்கு ரூ.100.00 | |

மேற்படி விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிவோர் அறிவுறுத்தல்களினை பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதினையும் அறியத் தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.** (சி-1883)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## வலம்புரி விருது பெற்றோர்



திரு.பொ.ஜெகசோதி



திரு.சா.தயாபரன்



திரு.சி.சசிகரன்



திருமதி.பி.உமாராணி



திருமதி.ர.விமலா

திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

## மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிச 25) 2024

இடம் - யாழ்ப்பாண கலாசார மண்டபம்
காலம் - காலை 9.30 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

### திருமுறைகள் நகர்வலம்

(காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை)

வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் வழிபாட்டைத் தொடர்ந்து, திருக்கோயில் வாயிலிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

### மார்கழித் திங்கள் 10 ஆம் நாள் (டிசம்பர் 25) புதன்கிழமை

காலை 8.30 மணியளவில் வண்ணை வைத்தீசுவரன் திருக்கோயில் வழிபாட்டை தொடர்ந்து திருக்கோயில் வாயிலிலிருந்து யாழ்ப்பாண கலாசார மண்டபம் வரை யானை மீது திருமுறைகள் நகர்வலம் இடம்பெற்று அரங்கங்கள் ஆரம்பமாகும்.

### காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்

(காலை 9.30 மணி தொடக்கம் 12.50 மணி வரை)

9.30 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும் (சிவத்திரு. தனியொளிசிவம் அகரன் செந்தமிழ் அருச்சுனைகுர்)

9.45 மணி - வரவேற்பு நடனம் செல்வி.அன்கா அன்டன் கௌரிதாசன் (யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

9.55 மணி - தொடக்க உரை - சிவத்திரு. நாகலிங்கம் வேதநாயகன் (ஆளுநர் - வட மாகாணம்)

10.00 மணி - அருளுரை - சீர்வளர்சீர் திருப்பெருந்தவத்திரு சாதுசண்முக அடிகளார் (குருமகா சந்நிதானம் - பழனி ஆதீனம்)

10.20 மணி - திருமுறை விண்ணப்பம் - கலாநிதி கிருபாசக்தி அம்மையார் குழுவினர் (இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

10.40மணி - தலைமை உரை சிவத்திரு.சோமசுந்தரம் பிரகதீஸ்வரன் (முதல்வர் - சிற்றி காட்வெயார் யாழ்ப்பாணம்)

10:50 மணி - வாழ்த்துரை - பேராசிரியர்.சி.சிறிசற்குணராசா (துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

11.00 மணி - வாழ்த்துரை - சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் (பிரதம செயலாளர் வட மாகாணம்).

11.05 மணி - தென்னாடு முதல்வர் உரை - சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன்

11:10 மணி - சிறப்புரை - "திருநெறியத் தமிழ்" முனைவர் கோ.ப.நல்லசிவம் (தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்,மெய்யியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்)

12:40 மணி - கௌரவிப்பு நிகழ்வு கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு 12.50 முதல் 1.30 மணி வரை**

### மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்

(1.30 மணி முதல் 5.00 மணி வரை)

1.30 மணி - அருளுரை - தவத்திரு.வேலன் சுவாமிகள் (ஆதீன முதல்வர் - சிவகுரு ஆதீனம் )

1.40 மணி - தலைமை உரை சிவத்திரு.நல்லையா விஜயசுந்தரம் (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)

1.50 மணி - நாட்டிய அஞ்சலி - இணுவில் குமரநர்த்தனாலயம்

2.05 மணி - சிறப்புரை - "அடியார் பெருமை" - சிவ.பழனிச்சாமி குமாரலிங்கம் (செந்தமிழ் வேள்விச் சதுரர்)

2.50 மணி - சிறப்புரை - "சங்கரன் தாள் மறவாமை பொருள்" - பேராசிரியர்.ஸ்ரீ பிரசாந்தன் (தமிழ்த் துறை தலைவர் - பேராதனைப் பல்கலைக்கழகம்)

3.35 மணி - பட்டிமண்டபம் இன்றைய இளையோரின் பத்திநெறியை வளர்ப்பதில் பெரிதும் பங்களிக்கும் சூழல் குடும்பமே ! பாடசாலையே !
தலைமை - சிவத்திரு.சந்திரமௌலீசன் லலீசன் (அதிபர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

4.35 மணி - "மெய்கண்டார் விருது" வழங்கல் நிகழ்வு

4.55 மணி - திருவாசகப் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கல் (சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக நடாத்தப்பட்டது)

4.50 மணி - நன்றியுரை - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (தலைவர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு.செந்தமிழாதன் (இளம்புலவர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம் (இ)

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**021 222 9722 / 070 770 1111**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## வலம்புரி விருது பெற்றோர்



திருமதி.ஜெ.சந்திரிகா



திருமதி.சு.வனிதா



திருமதி.சிந்தியா



திருமதி.கோ.பகிஜா



செல்வி.அ.சர்திஜா

# வடமாகாணத்தில் நெல் கொள்முதல் செய்ய பொறிமுறை உருவாக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே, மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும்.**

கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் "லேபல்கள்" மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இ.சந்திரசேகரன், அரிசியை வைத்துக்கொண்டு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரியும் எனவும், அவ்வாறான நிலைமை தொடரக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நஷ்டத்தில் வீழ்த்துவதையோ மக்களை கஷ்டத்தில் வீழ்த்துவதையோ விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இறக்குமதி செய்யப்படும் அரிசி மற்றும் ஏற்கனவே ஆலைகளின் இருப்பிலுள்ள அரிசிகள் தற்போதைய நிலைமைக்குப் போதுமானளவில் இருப்பதாகவும் இன்னும் ஒரு மாதத்தில் அரிசியின் விலை 200 ரூபாவை விட நிச்சயம் குறைவடையும் என அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (6-8-33)

# கரையொதுங்கிய படகு

(யாழ்ப்பாணம்)

யாழ் வடமராட்சி கிழக்கு,உடுத்துறை ஐந்தாம் பனையடி கடற்கரைப் பகுதியில் படகு ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

OFRP-6224JFN என்னும் இலக்கமுடைய குறித்த படகு ஆட்கள் யாருமற்று கடலில் மிதந்து வந்து கரையொதுங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச தலைவர் மற்றும் பொலிஸார் படகை பார்வையிட்டதுடன் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர். இயந்திரமற்று ஆழ்கடலில் இருந்து கரையொதுங்கிய இலங்கை நாட்டிற்கு சொந்தமான குறித்த படகை கடத்தல்காரர்கள் கையாண்டிருக்கலாமென பொலிசார் சந்தேகிப்பதுடன், குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# நோய்த் தாக்கத்தினால் அழிவடைந்த நெற்செய்கை



(தருமபுரம்)

புளியம்பொக்கணை கமநலசேவை பிரிவுக்கு உட்பட்ட சின்னவரணியில் பெரும்போக சம்பா நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவரது நெற்செய்கையானது 70 நாட்கள் கடந்த நிலையில் இனங்காண முடியாத நோய் தாக்கம் காரணமாக ஐந்து ஏக்கர் அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பா நெற்செய்கை முற்றுமுழுதாக அழிந்து நீரில் கரைந்து உள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அப்பகுதி விவசாய அமைப்புகள் மற்றும் கமநல சேவை திணைக்களத்தினர், ஏனைய நெற்செய் கைகள் மேற்கொள்ளும் இடங்களுக்குள் பரவ முன் அப்பகுதிக்கு வருகை தந்து குறித்த நோய்த் தாக்கத்தினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

## ❖ கோடா, கசிப்பு மீட்பு
## ❖ கைதான நபர் மறியலில்



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை, சேமமடு பகுதியில் பல காலமாக சூட்சுமமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கடந்த சனிக்கிழமை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்கவின் தலை மையிலான பொலிஸ் குழுவினர் சேம மடு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தி நிலை யத்தை நடத்தி வந்த அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்திருந்தனர்.

அந்த நபரிடமிருந்து 150,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் 150,000 மில்லி லீற்றர் கசிப்பு ஆகியன மீட்கப்பட்டதுடன் ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள் ளன.

சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து குறித்த நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித் துள்ளார். (6-8-250)

# பண்ணை மீன்சந்தை
## கட்டடம் ஆளுநரால் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் உள்ளூர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 52.5 மில்லியன் ரூபாய் செல வில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட பண்ணை மீன் சந்தைக் கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண உள் ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ்ப் பாண பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-33)

# பெண் உட்பட ஐந்து பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலி ஸார் முன்னெடுத்த விசேட நட வடிக்கையில் ஒரு பெண் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித் தனர்.

வவுனியா நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்த திறந்த பிடியா ணையின் கீழ் ஒருவரையும் திகதி யிடப்பட்ட பிடியாணையின் கீழ் நான்கு பேரும் என ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நீதிமன்றில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)

# வலம்புரியின் வெள்ளிவிழா
## 20.12.2024

## பெருந்தகை நீ

உனக்கெனவோர் பாணியில்
உல்லாசமாய் உலாவிடும்
நிந்தன் உலாவலில்
உதித்திடுமே புதியதொரு நாள்

புதியநாள் புதினமதை
உன்னருமைப் பக்கங்கள்
பக்குவமாய்ப் பதித்தே
பல்திசையும் பறந்தோடும்

மின்னஞ்சல் மிடுக்குடனே
உனதரிய செய்திகளை
உலகத்தமிழர்க்கு உவப்புடன்
தினந்தோறும் உவந்தளிக்கும்

உன் உடல் வருத்தி நிதம்
உவந்தளித்தும் பெருமிதமின்றிய
பெருந்தகையாய் வாழுதல்
உவகைதரும் ஒன்றாமே

களிப்புடன் நீண்டதொரு
காலங்களை உனதாக்கி
பல புதினம் பகிர்ந்தே
இவ்வுலகில் நிலைத்திட

இருபத்தைந்து ஆண்டென்ன
மனிதர் இருத்தெழும்பும் நாளெல்லாம்
நீ இனிதாய் வலம் வர
என் இனிய நல்வாழ்த்துக்கள்.

**- துளசிதாசன் துரத்தரி -**
ஓமந்தை

## 25இல் "முத்திரை பதிக்கும் வலம்புரி"

எத்தனை ஊடகம் இத்தரையில் பேறாகிறது
முத்திரை பதிக்கிறது வலம்புரி - சத்தான
செய்திகள் உவந்து, சத்திய நெறிகாக்கும்,
தொய்விலா வரம் புரியுதே !

பல்சுவை அம்சங்களைத் தேடிப்பறைசாற்றும்
சொல் நயம் மிக்கது வலம்புரி ! - வெல்கவே
வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா,
கொள்ளுமே நூற்றாண்டு விழா !

**- கே.எஸ்.சிவஞானராஜா -**

## வெள்ளிவிழாக் கண்டு நீ வாழியவே !

வலம்புரி சங்குநாதம் வாரத்தில் ஏழுநாட்கள்
வலம்வரும் வாசகர் கையில் வாஞ்சைமிகு பத்திரிகையாய்
நலம் தரும் ஆசிரியர் கருத்தும் நானாவித செய்திகளும்
பலம் தரும் வாசகர்களுக்கே ! பகலவனாய் வாழியவே !

திக்கெட்டும் செய்திதிரட்டித் திகட்டாத செந்தமிழில்
வித்திடுவாய் கட்டுரை கவியென ஆலடி மாநாட்டுடனே
பக்திக்கும் மனிதத்திற்கும் பக்கங்கள் தான்வைத்து
தித்திக்கச் செய்தி தருவாய் தீரனே ! வாழியவே !

பண்டைத் தமிழ் இலக்கிய பண்புகள் தனைக்காட்டி
இன்றைய இளையோர்க்கு இடித்துரைத்து நின்றாயே !
கண்மணியென மக்களிடை கலந்து தினம் நின்றாயே !
மண்புகழும் வலம்புரியே ! வெள்ளிவிழாக் கண்டு நீ வாழியவே !

சேற்றிடை செந்தாமரையென செய்தித்தாள் இடையே !
வீற்றிருந்தாய் இருபத்தைந்தாண்டு விண்புகழ் முட்டிடவே !
ஏற்றம்மிகு திசைகாட்டியாய் என்றென்றும் நிற்பாயே !
சிற்றம்பலவன் திருவருளால் என்றென்றும் வாழியவே !

**வலம்புரி வாசகர்**
**கவிஞர் சரசாலையூரான்**
**என்.பி. ஸ்ரீந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை- இந்தியாவிற்கிடையில் பாலம்;

# தேசிய பாதுகாப்பிற்கு பங்கம்

## உதய கம்மன்பில

(கொழும்பு)

**இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் பாலம் அமைக்கும் யோசனையைக் கடுமையாக எதிர்ப்பதாக பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் பாலம் அமைக்கும் யோசனையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தியா என்ற நாடு உருவாகும்போது ஏன் இலங்கை இணைக்கப்படவில்லை? இந்தியாவை பிரிட்டன் ஆண்டபோது இந்தியா ஊடாக அல்லாமல் இலங்கையை தனியாக ஆண்டது ஏன்? இலங்கையென்பது தனிநாடாகவே இருந்து வருகின்றது. கடலால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கென தேச எல்லை உள்ளது

நாம் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறி இருந்தால் மகாபாரதத்தின் ஒரு பாகமாகவே எமது நாடு இருந்திருக்கும்.

தனி நாட்டுக்குரிய கட்டமைப்பை இயற்கை எமக்குப் பரிசாக வழங்கியுள்ளது. எனவே பாலம் அமைத்து இயற்கை வழங்கிய பரிசை நாசமாக்கிவிடக்கூடாது.

எமது நாட்டில் போலியோ ஒழிக்கப்பட்டுள்ளது. மலேரியா இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை.

அங்கு சமூகப் பிரச்சினைகளும் உள்ளன. எனவே புதிய பிரச்சினைகள் உருவாக இடமளிக்கக்கூடாது.

தேசியப் பாதுகாப்பு, சுகாதாரம், சமூகம் உட்படப் பல விடயங்களுக்கு இந்தப் பாலம் அமைக்கும் யோசனை ஏற்புடையது அல்ல எனவும் தெரிவித்தார். (நி-8)

## ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ தகவலுக்கு அமைவாக அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 289.73 ரூபாவாகவும் 298.52 ரூபாவாகவும் காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 288.57 ரூபாவாகவும் 297.33 ரூபாவாகவும் காணப்பட்டது.

வளைகுடா நாணயங்கள் உட்பட ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்துள்ளது. (நி-8)


## பகிரங்க ஏல அறிவித்தல்
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2025.01.01- 2025.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

**பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2024.12.30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணி**

**பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.**

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத்தொகை |
|---|---|---|
| 1 | கிளி சந்தை இல 01 கோழியிறைச்சிக்கடை | 3,897,180.00 |
| 2 | இரணைமடு சந்தை கோழியிறச்சிக்கடை | 445,590.00 |
| 3 | பசுமைப்பூங்கா அழகுக்கலை நிலையம் | 12,462.29 |
| 4 | D8உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 137,178.21 |
| 5 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 24,852.25 |
| 6 | கிளி சந்தை பொதுமலசலகூடம் | 40,500.00 |
| 7 | பரந்தன் சந்தை பொதுமலசலகூடம் | 21,600.00 |
| 8 | கல்லாறு சந்தை தொகுதி | 11,700.00 |
| 9 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 21,192.61 |
| 10 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 247,500.00 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2024.12.30 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
3. 2024.10.11 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல், கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலக விளம்பரப்பலகையிலுள்ள நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-1882) **24.12.2024**


## பண்டிகைக் காலத்தில் விசேட போக்குவரத்துத் திட்டம்

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பல பேருந்துகள் மற்றும் ரயில்களை இயக்குவதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது

இதன்படி இன்று முதல் விசேட பஸ் சேவையை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பண்டிகைக் காலம் முடியும் வரை தினமும் 50 கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அதன் பிரதிப் பொது முகாமையாளர் திரு.பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.

தேவைப்பட்டால் கூடுதல் பேருந்துகளை இயக்குமாறும் அனைத்து டிப்போ மேலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் பண்டிகை காலத்தையொட்டி சில சிறப்பு ரயில் பயணங்களும் இயக்கப்படவுள்ளது

மேலும் இதற்கு மேலதிகமாக யாழ் தேவி விரைவு ரயிலுடன் யாழ்ப்பாணம் வரை நகரங்களுக்கு இடையேயான விரைவு ரயிலையும் கூடுதல் பெட்டிகளை இணைத்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது .(நி-8)

## பாதுகாப்பற்ற மின்வேலிகளால் 50 காட்டு யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் அனுமதியற்ற மின்சார வேலிகள் மற்றும் கம்பிகள் பாவனையால் சுமார் 50 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோதச் செயல்கள் தொடர்பாக ஏற்கனவே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் காட்டு யானைகளை பாதுகாக்க மக்களின் ஆதரவை எதிர்பார்ப்பதால் வேலிகள் அல்லது கம்பிகளுக்கு அனுமதியின்றி மின்சாரம் வழங்குவது குறித்து அறிவிக்குமாறு மின்சார சபை அறிவித்துள்ளது. (நி-8)

## தேசிய அருங்கலைகள் பேரவைக்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவராக கலாநிதி ஆயிஷா விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். கலாநிதி விக்கிரமசிங்க மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக 2006 ஆம் ஆண்டு முதல் நாகரிக ஆடை வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் நிபுணத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பரிவு நிறைந்த சுப எண்ணங்கள் நாம் எவருக்கும் கொடுக்கக்கூடிய மிக உயர்ந்த பரிசாகும்.
>
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பிக்களுக்கு...

கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றி அபரிதமானது. அதே வேளை தேசிய மக்கள் சக்தியின் அரசாட்சி எவ்வாறாக இருக்கும் என்பதை மதிப்பீடு செய்வதற்கு இன்னும் சில கால அவகாசம் தேவையாக இருக்கும்.

அதேநேரம் தேசிய மக்கள் சக்தியின் மூலவேராக இருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) அரசியல் கட்டமைப்பு என்பது வித்தியாசமானது.

அதாவது ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் நிறைந்த வேறுபாடுகள் உண்டு.

ஆம், மக்கள் விடுதலை முன்னணி ஓர் அரசியல் கட்சி என்பதற்கு அப்பால், அது ஓர் இயக்கம் என்று கூறிக் கொள்ள முடியும்.

எனவே ஓர் இயக்கமாக இருக்கக்கூடிய ஜே.வி.பியில் இறுக்கமான நிபந்தனைகளும் கட்டுக்கோப்புகளும் முன்னிலை பெற்றிருக்கும்.

தவிர, அந்த அமைப்பின் உறுப்பினர்கள் தமது ஊதியத்தைக்கூட அந்த அமைப்பிடம் செலுத்திய பின்னர் அதிலிருந்து ஒரு பகுதியை தங்களின் தேவைக்காகப் பெற்றுக் கொள்கின்ற நடைமுறையும் உண்டு.

அதாவது சில மத அமைப்புகள் பின்பற்றுகின்ற சில நிபந்தனைகளைப் போல ஜே.வி.பியும் மிகவும் இறுக்கமான நிபந்தனைகளைக் கொண்டுள்ளது.

எனவே அங்கு கட்சியின் மத்திய குழு எடுக்கின்ற தீர்மானங்களும் ஏலவே பின்பற்றப்படுகின்ற நிபந்தனைகளுமே அவர்களின் ஆட்சியில் செல்வாக்குச் செலுத்தும்.

இதை இன்னும் விரித்துரைப்பதாயின், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் பெயரளவுப் பங்காளர்களாகவே இருப்பர்.

ஆக, ஜே.வி.பி என்ற ஓர் இயக்கத்தின் சட்டதிட்டங்களும் விதிமுறைகளும் அரசாட்சியில் அதீத செல்வாக்குச் செலுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் இந்த நிலைமை சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசிய மக்கள் சக்தியில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பெயரளவில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும்போது, அஃது தமிழ் மக்களுக்கு மிகப் பாதகமான அரசியல் களநிலையை ஏற்படுத்தும்.

எனவே தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக வட மாகாணத்திலுள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆகவே தமது கட்சித் தலைமைக்கு அவர்கள் தங்களின் நிலைப்பாட்டை எடுத்துக்கூறி, தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும்.

இதைவிடுத்து அவர்கள் மௌனித்துப் போவார்களாயின், எங்களின் நிலைமை மிக மோசமாகிவிடும் கவனம்.

# வெளிமாவட்டங்களில் பணியாற்றாத ஆசிரியர்கள் இடம் மாற வேண்டும்

## அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன் – வடக்கு ஆளுநர்

ஒருபோதும் வெளிமாவட்டங்களில் பணியாற்றாத ஆசிரியர்கள் விரைவில் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற வேண்டும். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களில் கடமைபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள், வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்றுத்திங்கட்கிழமை (23.12.2024) சந்தித்துக் கலந்துரையாடினர்.

வெளிமாவட்டங்களில் தாம் நீண்டகாலம் பணியாற்றுவதாகவும் செல்வாக்குகளின் அடிப்படையில் சிலர் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் கூட சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள நிலையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஆளுநரிடம் முறையிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும் எனவும், அவ்வாறு இதுவரை பணியாற்றாத ஆசிரியர்கள் இருப்பின் உரிய நடைமுறைக்கு அமைவாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

உரிய காரணங்கள் இல்லாமல் இடமாற்றங்களை வழங்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்படும் போது அதே பாடத்துக்குரிய ஆசிரியர் வெளிமாவட்டத்துக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படும் எனவும் ஆளுநர் கூறினார். (ம-7,33)

# சபாநாயகர் அலுவலகத்தில் கூறியபடியே 'கலாநிதி' என்று பிரசுரிக்கப்பட்டது

## பாராளுமன்ற அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற இணையத்தளத்தில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் 'கலாநிதி' என்று பிரசுரித்தமை தொடர்பில் பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி அநுர திஸாநாயக்க மற்றும் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் 'கலாநிதி' என்று குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் பாராளுமன்ற இணையத்தளத்தில் தரவுகள் உள்ளிடப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் உறுப்பினராக ஹர்ஷன நாணயக்கார பெயரிடப்பட்டு, அவருடைய பெயருக்கு முன்னால் 'கலாநிதி' என்று குறிப்பிட்டு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேற்கொண்ட முறைப்பாட்டின் பிரகாரம், இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாராளுமன்றத்தின் மூன்று அதிகாரிகளிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பலாலி இராணுவ முகாமில் இளம் சார்ஜன்ட் மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய இளம் சார்ஜன்ட் தர அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகலைச் சேர்ந்த றவித்த றங்கன திஸாநாயக்க (வயது 35) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

2007 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் சார்ஜன்ட் தர அதிகாரியாக இணைந்து கொண்ட அவர் பலாலி இராணுவ முகாமில் கடமை ஆற்றிவந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நெஞ்சுவலி காரணமாக பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் அவர் நேற்று நண்பகல் உயிரிழந்துள்ளார். இம்மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

# பரிசில் நிகழ்வு

சாவகச்சேரிப் பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசில் நிகழ்வு பிரதேச சபை செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் நாவற்குழி கந்தையா கனகம்மா மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசியக் கல்வியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாபூஷணம் க.கு.றமணன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7)

# போலி நாணயம் மாணவர்கள் கைது

வர்த்தக நிலையமொன்றில் போலி நாணயத்தாள்களைக் கொடுத்துப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முயன்ற பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு மாணவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மாணவர்கள் 15-16 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நான்கு மாணவர்களும் திகன பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு வந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட 5000 ரூபாய் நாணயத்தாள் போலியானது என உணர்ந்த வர்த்தகர் இது தொடர்பில் தெல்தெனியப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவர்களை கைது செய்ததுடன் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவர்களிடம் 5000 ரூபாய் மதிக்கத்தக்க 57 போலி நாணயத்தாள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், தெரிந்த மாமா ஒருவர் பொருட்களை வாங்க இந்த நோட்டுக்களை கொடுத்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். (ம-7)

# மட்டக்களப்பில் இரு வேறு விபத்து

## இருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் 20 வயது இளைஞர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்புப் பொலிஸ் பிரிவில் வீதியால் நடந்து சென்றவர் மீது கனரக வாகனம் மோதியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நகர்ப் பகுதியை நோக்கிப் பிரயாணித்த கனரகவாகனம் வீதியைக் கடக்க முயன்ற ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மட்டு நாவக்கேணியைச் சேர்ந்த 46 வயதுடைய சி.சிவநேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை மாமாங்கம் கோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த ஒருவர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த றொலர் வாகனத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை மரங்கள் தறிப்பு முறையிட விசேட இலக்கம்

## பனை அபிவிருத்தி சபைத் தலைவர்

**(யாழ்ப்பாணம்)**

**சட்டவிரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 077 927 3042 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என பனை அபிவிருத்திச் சபை தலைவர் வி. சகாதேவன் தெரிவித்துள்ளார்.**



சாவகச்சேரி- தனங்களப்பு பகுதியில் சட்ட விரோத பனை மரங்கள் தொடர்ச்சி யாக தறிக்கப்பட்டு வந்த நிலையில், பொது மக்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து பனை அபிவிருத்தி சபையால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கனரக வாகனம் கொண்டு வரப்பட்டு 25 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதாக முறைப்பாட்டிற்கு அமைய களவிஜயம் மேற் கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் இளவயதுப் பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எரியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டு இருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

# சட்டவிரோத மதுபானத்துடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் மத்தி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சட்ட விரோத மதுபானத்துடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தி பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 10 லீற்றர் சட்டவிரோத மதுபானத்தையும் மீட்டிருந்தனர். மீட்கப்பட்ட சட்டவிரோத மதுபானத்தையும் கைது செய்யப்பட்ட நபர்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (6-8-33)

# குன்றும் குழியுமான நிலையில் உசன்- விடத்தற்பளை வீதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உசன் விடத்தற்பளை பிரதான வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் குறித்த வீதியில் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்திற்காக வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

குன்றும் குழியுமான குறித்த வீதியில் தற்போது வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் மக்கள் போக்குவரத்துக்காக பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இந்த வீதியை புனரமைத்துத் தருவதாக அதிகாரிகள் கூறியிருந்த நிலையிலும் இவ்வளவு காலமாக எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் புதிய ஆண்டிலாவது வீதியை புனரமைத்துத் தராது விட்டால் மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (6-8)

# சர்வஜன அதிகாரத்தில் இணைந்தார் சந்திரசேன

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளை வகித்த எஸ்.எம். சந்திரசேன நேற்று சர்வ ஜன அதிகாரத்தின் உறுப்பினராக இணைந்து கொண்டார்.

கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவிடம் இருந்து அவர் கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டார்.

எஸ்.எம். சந்திரசேன 2001 முதல் 2024 வரை அநுராத புரம் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 600 | 600 | 550-600 | 450 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1000 | 800 |
| தக்காளி | 600 | 600 | 250 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 150-180 | 200 |
| கோவா | 240 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 250 | 220 | 250 |
| பூசணி | 200 | 220 | 160 | 250 |
| புடோல் | 300 | 300 | 300 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 150-400 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 360 | 200 |
| பாகற்காய் | 1500 | 1100 | 1500 | 1500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 500-600 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 800 | 600 | 650 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 500 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 200 | 150 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 400 | 400-500 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 90-150 | 160-220 |
| இராசவள்ளி | -- | 800 | 750 | 800 |
| வெங்காயப்பூ | -- | 460 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 200 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 140 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 120 | 80 | 80 | 200 |


**வலிகாமம் தெற்கு பிரதேச சபை-சுன்னாகம்**

**ஏலவிற்பனை**

எமது சபையின் சுன்னாகம் வாழைக்குலை சந்தையில் குவிக்கப்பட்ட கட்டட இடிபாடுகள் **07.01.2025ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு** பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. ஏலதாரராக கலந்து கொள்வோர் அன்றைய தினம் 10.00 மணிக்கு முன்னர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 செலுத்தி தங்களைப் பதிவுசெய்வதன் மூலம் ஏலத்தில் பங்குபற்ற முடியும். ஏலத்துக்குரிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ஏலம் நடைபெறும் நேரத்தில் அவ்விடத்தில் அறியத்தரப்படும். சித்திபெற்ற ஏலதாரர் உரிய தொகையினை அன்றைய தினமே செலுத்திப் பொருட்களை முழுமையாக அகற்றுதல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திருமதி. சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

**24.12.2024**

(C-1881)

**பானை முறையிலான வடிகலன் பொறித்தொகுதி திருத்தம்**

எமது வரணி வடிசாலையில் பொருத்தப்பட்ட பானை முறையிலான வடிகலன் பொறித்தொகுதியை 2025 ஆம் ஆண்டு முழுமையாக தொழிற்படுத்தக்கூடியவாறு திருத்தம் செய்வதற்காக இத்துறை சார்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் மூலம் திருத்துவதற்கான கூறுவிலைகளை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 தொடக்கம் 4.30 மணிவரையான நேரங்களில் பார்வையிட்டு 10.01.2025 ஆம் திகதிக்கு முன்னராக **தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

**தொலைபேசி இலக்கம்**
**021 205 0854**

**தலைவர்,**
**திரு.க.இராசதுரை.**

(சி-1880)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழைக்குலை...

வரே உயிரிழந்தவராவார்.

வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிலில் நான்கு வாழைக் குலைகளை சந்தைக்கு அதிகாலை ஏற்றிக் கொண்டு போகும்போது வீட்டிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் வீதியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். (ம-7,60)

## சுகாதார...

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தொண்டர் ஊழியர்களின் பிரதிநிதிகள் சிலரை, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சுகாதார அமைச்சிற்கு அழைத்துச் சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தலைமையிலான குறித்த குழுவினர் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, குறித்த தொண்டர் ஊழியர்களுள் 28 பேர் சுகாதார அமைச்சுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், தங்களது பிரச்சினைகளை நேரடியாக அமைச்சர் உள்ளிட்ட குழுவினரிடம் முன்வைப்பதற்கான சந்தர்ப்பமும் இதன்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. (ம-7)

## டெங்குத் தொற்று...

விய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து டெங்குத் தொற்று மிகையாக அதிகரித்து வருகின்றது.

இதன்படி, நவம்பர் மாதத்தில் 134 பேரும் டிசம்பர் மாதத்தில் 91 பேரும் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாகப் பேணுவது அவசியம் எனத் தெரிவித்தார். (ம-7)

## மார்கழிப்...

வழிபாடுகளை அடுத்து ஆரம்பமாகவுள்ளது.

ஆலய முன்றலில் ஆரம்பமாகும் திருமுறை நகர்வலப் பவனியானது யாழ்.மாநகரை வலம் வந்து மார்கழிப் பெருவிழாவின் அரங்க நிகழ்வுகள் இடம்பெறும் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை வந்தடையவுள்ளது.

தொடர்ந்து காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை தில்லைக்கூத்தன் திருவம்பலம், சேக்கிழார் அரங்கம் என இரு அரங்கங்களாக மார்கழிப் பெருவிழா சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

## கேப்பாப்பிலவு...

ருந்தனர்.

பின்னர் தஞ்சம் கோரிய 115 முஸ்லிம் இனத்தினைச் சேர்ந்த மியன்மார் அகதிகளும் மிரிஹானை இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்கான இடவசதி இல்லாத காரணத்தினால் இவர்களில் 103 பேர் இரண்டு பேருந்துகளில் மீண்டும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப்படைத் தளம் ஒன்றில் தற்காலிகமாகத் தங்கவைக்க அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குறித்த படகில் 45 சிறுவர்கள், 24 பெண்கள், 46 ஆண்கள் உள்ளடங்கலாக 115 பேர் பயணித்துள்ளார்கள். இதனால் கடந்த 21.12.2024 அன்று இவர்கள் மீது சட்டவிரோதமாக இலங்கைக்கடலுக்குள் நுழைந்ததாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு இவர்கள் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அதில் சட்டவிரோதப் படகு பயணத்திற்குச் செய்யப்பட்டதாக 12 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## ஒழிக்க...

நாயக்க தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினதும் நிதியியல் உளவறிதல் பிரிவினதும் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சுகள், ஒழுங்குமுறைப் படுத்தல் நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் முகவராண்மை நிறுவனங்கள் உள்ளடங்கலாக தொடர்புள்ள 24 நிறுவனங்களுக்காக வலுவமைக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை நிதியியல் உளவறிதல் பிரிவு இங்கு வலியுறுத்தியது.

இலங்கையின் நிதிக்கட்டமைப்பு ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் அதன் ஊடாக சாதகமான பெறுபேறுகளைப் பெறவும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான மற்றும் செயற்திறனுள்ள கட்டமைப்பொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (ம-7)

## சேவை...

மக்களுக்குச் சேவை செய்ய தென்பதும் முன்னேற்றுவதென்பதும் மிகச் சவாலான விடயமாகவே இருக்கிறது என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கரைச்சி பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழாவும் "கரைஎழில்" நூல் வெளியீடும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது,

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். அதே போல எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. மற்றையவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்த வேண்டும். இதே வேளை, வடக்கு மாகாணக் கல்வி நிலையிலுள்ள ஒரு அதிகாரிக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாக அணுகுமாறு கூறிவிட்டு அவர்களை அவரிடம் அனுப்பினேன். அந்த அதிகாரி தனது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று விட்டு ஆசிரியர்களை, இரவு 7 மணிக்குத்தான் அலுவலகத்தில் சந்தித்திருக்கிறார். ஆசிரியர்களை மிக மோசமான முறையில் பேசி திருப்பி அனுப்பியிருக்கிறார். இவ்வாறான அலுவலர்கள் எமது மாகாணத்தில் எனக்கு கீழ் இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும்போது வெட்கமாக இருக்கிறது என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 5694
V 2 1 5 1 4 0
அத சம்பத V 5 1 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 269
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1724
E 03 27 54 75 E
Double Chance 38916

மெகா பவர்
திகதி 23/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2042
F 25 17 42 45 61
110325

லக்கி 7 VIP
திகதி 2024.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 520
J 3 0 4 6 5 3 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3936
சீட்டிழுப்பு திகதி 23.12.2024
H 11 26 27 61
H 051531
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.23
சீட்டிழுப்பு இலக்கம் 1003
விருச்சிகம் 02 16 20 22 விருச்சிகம்
181493 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.12.2024 வெற்றி வாரம் 402
A 0 2 2 5 0 2
41706
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,764,597.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2668
சீட்டிழுப்பு திகதி 2024.12.23 தினம் திங்கட்கிழமை
21 32 54 64 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,575,643.20

திகதி 23.12.2024 வெற்றி வாரம் 4829
சனிதா
03 07 08 50 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,357,450.80
44740

ஜயோதா Jayoda
திகதி 2024.12.23 வெற்றி வாரம் 2088
02 39 51 66 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,940,925.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4380
சீட்டிழுப்பு திகதி 23.12.2024 தினம் திங்கட்கிழமை
14 16 19 56 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,238,439.20
175838

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 08 16 21 47 51
1844
23.12.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,145,379.20

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2494
சீட்டிழுப்பு திகதி: 2024.12.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,623,532.80
அத கோடிபதி ADA KOTIPATHI
18 32 35 49 Z
781077


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

- கோண்டாவில் - கல்வியங்காடு, இந்து, கௌரவ குடும்பம், 1990, ரேவதி, Phd in Engneering, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34935
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1988, உத்தரம், Bsc Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34337
- காரைநகர் , இந்து, கௌரவ குடும்பம், 1989, சித்திரை, Graduate, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை , இந்து, கௌரவ குடும்பம், 1990, அவிட்டம்,Bsc(Hons), கனடா, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை , இந்து, கௌரவ குடும்பம், 1987, உத்தரம்,Bsc, ACMA, CGMA Senior Finacial Analyst, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரம்பன் - Jaffna Town, இந்து, கௌரவ குடும்பம், 1988, ரோகினி, Bsc Engineer, கனடா, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 28033
- உரும்பிராய் - இணுவில், இந்து, கௌரவ குடும்பம், 1991, பூரம், Network Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 29309
- கந்தர்மடம், இந்து, கௌரவ குடும்பம், 1989,உத்திராடம், Msc, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குடும்பம், 1986, திருவோணம், BBA(Hons), CIMA Fully Qualified, UK, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(666)

S.Sharma J.P
www.thaalee.com
- 077 539 3728
- 077 803 8193




யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாக நேற்றுப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் மானந்த யஹம்பத் அவர்கள், யாழ்ப்பாண மாவட்டப் பிரதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களை மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம-7,33)

## பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) தகவல்களுக்கு அமைவாக, கடந்த நவம்பர் மாதம் நாட்டின் பிரதான பணவீக்கமானது மேலும் குறைவடைந்துள்ளது.

அதன்படி, 2024 ஒக்ரோபரில் -0.7% ஆகக்காணப்பட்ட பிரதான பணவீக்கம், நவம்பரில் -1.7% ஆக குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 ஒக்ரோபரில் 1.3% ஆக இருந்த உணவு வகைப் பணவீக்கம் நவம்பரில் 0.0% ஆகக் குறைந்துள்ளது.

அதேநேரத்தில் ஒக்ரோபரில் -2.3% ஆக காணப்பட்ட உணவுவகையல்லா பணவீக்கம் நவம்பரில் -3.1% ஆக குறைந்தது. (ம-7)


## வேலையாட்கள் தேவை

- உள்ளூர் வாகனம் செலுத்துவதற்கு றைவர் (Driver) தேவை.
- கணக்காளர் தேவை.

தொடர்புகளுக்கு :
021 430 3354
(2825)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1886)
076 825 7716 (ஆகாஸ்)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டப் பகுதியில் இரண்டு பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அதி சொகுசு வசதிகளுடன் ஆறு அறைகள் கொண்ட மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும் :
077 391 2298/ 076 009 8661
(665)


## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900
48/= ~~80/=~~
(667)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1885)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நுவம்)

(உரிமையாளர் – நியூ கமல் செரமிக்ஸ், ஞானம்ஸ் ஹோட்டல்)

ஈரவிழிகளுடன் எம் இதயத்தெய்வத்தை
எண்ணிப் பார்க்கின்றோம்
இதயங்கள் கனக்கின்றன
எழுத முடியவில்லை
நெஞ்சின் துயரச் சுவடுகளும்
கண்களின் உதிரிப் பூக்களும்
உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன
எங்கள் பாதங்கள் பூமியில் ஈரத்தோடு பதிகின்றன
தாயாய் தந்தையாய் எமை வளர்த்து
கல்விக் கண் திறக்க வைத்து
எங்கள் வாழ்வை மலரச் செய்தீர்கள்
உங்கள் உதிரம் சிந்தி உழைத்தவற்றை
எமக்கு ஆதாரமாகத் தந்து ஆறுதலடைந்தீர்கள்
செத்தும் கொடுத்த சீதக்காதிபோல்
வாரி வழங்கினீர்கள்
நீங்கள் என்றும் எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்

அன்னை மடிதனில்
31.07.1950

ஆண்டவன் அடியினில்
24.11.2024

குடும்பத்தினர்

(668)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடத்தின் மீது மோதிய விமானம் பயணித்த அனைவரும் உயிரிழப்பு

## பிரேசிலில் துயரச் சம்பவம்



(பிரேசிலியா)

பிரேசிலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள கிராமடோ நகரில் ஒரு சிறிய தனியார் விமானமொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

விமானத்தை இயக்கி வந்த பிரேசிலிய தொழில் அதிபர் லூயிஸ் கிளாடியோ கலியாசி, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேசிலின் தேசிய குடியுரிமைத் தற்காப்புப் பிரிவின் கூற்றுப்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை விமானம் புறப்பட்ட சில நிமிடங்களுக்குப் பின்னர் விபத்து ஏற்பட்டுள்ளது.

விமானம் கட்டடம் ஒன்றின் புகைக்கூண்டு மீது மோதியது. பின்னர் ஒரு குடியிருப்புடனும் இறுதியாக ஒரு தளபாட வணிக நிலையம் ஒன்றிலும் மோதி விபத்துக்குள்ளாகியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த விபத்தில் தரையில் இருந்த 17 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

# சாரத்தியத்தின் போது தொலைபேசி பயன்படுத்த தடை

## மீறினால் பணி இடை நீக்கம்

### தமிழக அரசு அதிரடி

(டில்லி)



தமிழகத்தில் பேருந்தை இயக்கும் வேளையில் தொலைபேசியைப் பயன்படுத்த சாரதிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தொலைபேசியைப் பயன்படுத்தும் சாரதிகள் 29 நாட்கள் வரை பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தமிழகத்தில் பேருந்து சாரதிகள் தொலைபேசியில் உரையாடியவாறு பேருந்தினைச் செலுத்தி வரும் வீடியோக்கள் சமூக வலைத் தளங்களில் வெளியாகி மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றன.

அத்துடன் இது தொடர்பான முறைப்பாடுகளும் தமிழக போக்குவரத்து ஆணையகத்திற்கு அதிகளவில் கிடைக்கப்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே தமிழக போக்குவரத்து அமைச்சினால் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு குவைத்தின் உயரிய விருது



(குவைத்)

உத்தியோகபூர்வ பயணமாக குவைத்துக்குச் சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வளைகுடா நாட்டின் உயரிய விருதான 'தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல்-கபீர்' விருது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய பங்களிப்புக்காக குவைத் இந்த கௌரவ விருதினை அவருக்கு வழங்கியது.

குவைத்தின் பயான் அரண்மனையில் வைத்து குவைத்தின் அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல் சபாவிடம் இருந்து பிரதமர் மோடி விருதினைப் பெற்றார்.

'தி ஆர்டர் ஆஃப் முபாரக் அல் கபீர்' என்பது குவைத்தின் மாவீரர் பட்டமாகும்.

இது நாட்டுத் தலைவர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரச குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு நட்பின் அடையாளமாக வழங்கப்படுகிறது.

முன்னதாக பில் கிளிண்டன், இளவரசர் சார்லஸ் மற்றும் ஜார்ஜ் புஷ் போன்ற உலகத் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இது குறித்து எக்ஸில் பதிவொன்றை இட்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, குவைத்தின் உயரிய அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல் சபாஹ் அவர்களால் முபாரக் அல்-கபீர் விருது வழங்கப்பட்டதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இந்த கௌரவத்தை இந்திய மக்களுக்கும் இந்தியாவிற்கும் குவைத்துக்கும் இடையிலான வலுவான நட்புறவுக்காக நான் அர்ப்பணிக்கிறேன் என பதிவிட்டுள்ளார். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 664





பள்ளிப் படையைச் சுற்றிலும் மண்டியிருந்த காட்டுக்குள்ளும் பிரவேசித்தது.

### 35 ஆம் அத்தியாயம் வேளை நெருங்கி விட்டது!

நூறு வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு இப்போது பாழடைந்த காடு அடர்ந்திருந்த பள்ளிப் படைக் கோவிலை முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கிறோம். ஆழ்வார்க்கடியான் இங்கே ஒழிந்திருந்துதான் ரவிதாஸன் முதலியவர்களின் சதியைப் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டான். அதே இடத்துக்கு இப்போது வந்தியத்தேவனும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

பாழடைந்த பள்ளிப் படையின் ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வந்தியத்தேவனையும், அவன் குதிரையையும் அழைத்து வந்தார்கள்.

"அப்பனே! சற்று நீ இங்கேயே இரு! உன்னைக் கூப்பிட வேண்டிய சமயத்தில் கூப்பிடுகிறோம். தப்பித்துச் செல்லலாம் என்று கனவு காணாதே! பழக்கப்பட்டவர்களைத் தவிர, வேறு யாரும் இக் காட்டுக்குள் வரவும் முடியாது. வெளியேறவும் முடியாது. அப்படி வெளியேற முயன்றால் நிச்சயம் உயிரை இழப் பாய்! என்றான் ரவிதாஸன்.

அப்படி நான் வழி கண்டுபிடித்துப் போகப் பார்த்தால் நீ மந்திரம் போட்டுக் கொன்று விடுவாய்! இல்லையா, மந்திரவாதி!" என்று கூறி வந்தியத்தேவன் நகைத்தான்.

"சிரி, சிரி! நன்றாய்ச் சிரி!" என்று சொல்லி ரவிதாஸனும் சிரித்தான்.

அச்சமயம் பார்த்து எங்கேயோ தூரத்தில் நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியது, அதைக் கேட்டுப் பக்கத்தில் எங்கேயோ கோட்டான் ஒன்று முனகியது. வந்தியத்தேவனுடைய உடல் சிலிர்த்தது குளிரினால் அல்ல. அடர்ந்த அந்தக் காட்டின் மத்தியில் வாடைக் காற்றுப் பிரவேசிக்கவும் பயந்ததாகக் காணப்பட்டது.

ஏன்? அங்கே மழைகூட அவ்வளவாகப் பெய்ததாகத் தெரியவில்லை. தரையில் சில இடங்களில் மட்டும் மழைத்துளிகள் சொட்டி ஈரமாயிருந்தது. காற்று இல்லாதபடியால் இறுக்கமாக இருந்தது.

அங்கே வந்து சேர்வதற்குள் வந்தியத்தேவனுடைய அரைத்துணி உலர்ந்து போயிருந்தது. சுற்றிக் கட்டியிருந்த துணிச் சுருள் மட்டும் ஈரமாயிருந்தது அதை எடுத்து விரித்துப் பக்கத்தில் கிடந்த பாறாங்கல்லின் மீது உலர்த்தினான். அதே கல்லின் ஒரு மூலையில் வந்தியத்தேவன் உட்கார்ந்து பள்ளிப்படைச் சுவரின் மீது சாய்ந்து கொண்டான். அவனுக்குக் காவலாக அருகில் ஒருவன் மட்டும் இருந்தான்.

சற்றுத் தூரத்தில் காட்டின் மத்தியில் ஏற்பட்டிருந்த இடைவெளியில் அவனுடன் மற்றவர்கள் வட்ட வடிவமாக உட்கார்ந்தார்கள். பள்ளிப் படைக்கு உள்ளேயிருந்து ஒருவன் பழைய சிம்மாசனம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து போட் டான்.

அதில், 'சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட சிறுவனை உட்காரச் செய்தார்கள். தீவர்த்திகளில் இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை அணைத்து விட்டார்கள். அவ்விதம் தீவர்த்திகளை அணைத்த போது எழுந்த புகை நாலாபுறமும் சூழ்ந்தது.


"ராணி இன்னும் வரவில்லையே?" என்றான் ஒருவன். சமயம் பார்த்துத்தானே வரவேண்டும்? இரண்டாவது ஜாமத்திலேதான் நானும் வரச் சொல்லியிருக்கிறேன்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## ஆறும் நீரும்



நல்ல வெயில் காலம். வழிப்போக்கர்கள் இருவர் சாலை வழியாக நடைக்களைப்புடன் சென்று கொண்டிருந்தார்கள் வெயில் கொதிப்பும் அவர்களுக்குத் தண்ணீர்த் தவிப்பை உண்டு பண்ணின.

சுற்றிலும் ஒரே பொட்டல். அருகில் வீடு வாசல் தோப்புத் துரவு ஒன்றும் கிடையாது. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள்.

திடீரென்று அவர்களில் ஒருவர் மகிழ்ச்சியோடு பேசினார் அண்ணா, இப்போது தான் நினைப்பு வருகிறது வலதுகைப் புறமாக கூப்பிடு தூரம் சென்றால் அங்கே ஓர் ஆறு இருக்கிறது. அங்கே சென்று தண்ணீர் குடித்துக்களைப் பாறிய பின் திரும்பலாம்.

அவர் கூறிய செய்தி கூடவந்தவருக்கும் இன்பம் தந்தது.

இருவரும் வலது புறமாகத் திரும்பினார்கள். சிறிது தூரம் நடந்த பின் ஆற்று மணல் பரந்து கிடப்பதைக் கண்டார்கள்.

ஆற்றைக் கண்டுவிட்ட குதூகலத்துடன் கொதிக்கும் மணற் சூட்டையும் பொருட்படுத்தாமல் விரைந்து நடந்தார்கள்.

ஆனால் என்ன ஏமாற்றம்! அந்த ஆறு வற்றி வறண்டுபோய்க் கிடந்தது. இக் கரையிலிருந்து அக்கரைவரை எங்கும் ஒரே மணல் வெளிதான் கண்ணுக்குத் தோன்றியது. தூரத்தில் தெரிந்தது கானல் தான்.

இருவரும் மனமுடைந்து போனார்கள். சிறிது நேரத்தில் தண்ணீர் கிடைக்காவிட்டால் மயங்கிச் சோர்ந்து விழ வேண்டியதுதான்! அவர்கள் நம்பிக்கை இழந்து சோர்ந்து நின்றபோது ஆடு மேய்க்கும் பையன் ஒருவன் அங்கே வந்தான். ஆற்று மணலைத் தோண்டினான். இரண்டடி ஆழம் தோண்டிய பின் அடியிலிருந்து தண்ணீர் ஊறி வந்தது. இரு கைகளாலும் அள்ளிக் குடித்து விட்டுச் சென்றான். அதைப் பார்த்த வழிப் போக்கர்கள் தாங்கள் நின்ற இடத்திலேயே மணலைத் தோண்டினார்கள். அங்கேயும் அடியில் நீர் ஊறியது. அவர்கள் தூய்மையான அந்த நீரைப் பருகித் துன்பம் தீர்த்தார்கள் ஆற்றுத் தாயைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே நடந்து சென்றார்கள்.

கருத்துரை :- தான் வறண்டு போனாலும் ஆறு தன்ஊற்று நீரை வழங்கி நாடி வந்தவர்களை நலமடையச் செய்யும்.

அதுபோல நல்ல குடியில் பிறந்த பெரியோர் தாங்கள் துன்பமடைந்த காலத்தும் நாடி வந்தவர்க்கு நன்மை செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org